பா.ஜ.க.வுடன் கூட்டணியில்லை என்பதில் உறுதி:

தமிழக வெற்றிக்கழகத்துடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்குமா?

எடப்பாடி பழனிசாமி பரபரப்பு பேட்டி

கோவை, நவ. 13–

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோவை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.அவர் கூறியதாவது:–

விமர்சனங்கள்

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் என்னை பற்றி பல விமர்சனங்களை அண்மை காலங்களாக தெரிவித்து வருகிறார். எதிர்கட்சிதலைவர்எடப்பாடி பழனிசாமியாகிய நான் அவரை பற்றி விமர்சனம் செய்வதாக, அவரது கட்சி நிர்வாகிகளுக்கு எழுதிய மடலில் தெரிவித்துள்ளார்.

ஏதோ நான் முதல்–அமைச்சரை கொச்சைப்படுத்தி பேசியதாகவும், எதிர்கட்சி தலைவர் என்ற நிலையில் இருந்து நான் தவறுதலாக பேசுவதாக விமர்சனம் செய்திருக்கிறார்.

மு.க.ஸ்டாலின் எதிர்கட்சி தலைவராக இருந்தபோது, நான் முதல்–அமைச்சராக இருந்த காலகட்டத்தில், எப்படியெல்லாம் பேசினார் என்பது உங்களுக்கு தெரியும். குறிப்பாக என்னை தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்தார். எடப்பாடி பழனிசாமி தமிழக முதல்–அமைச்சராக வர ஊர்ந்து பறந்து சென்றார் என விமர்சனம் செய்தார்.

தக்க பதிலடி

இப்படி முதல்–அமைச்சர் தன்னுடைய பதவியை, நிலையை மறந்து தன்னை விமர்சிக்கிறார்.

ஆனால் என்னை பொறுத்தவரைக்கும், அ.தி.மு.க கட்சி நிர்வாகிகளை பொறுத்தவரை எந்த ஒரு எதிர்கட்சியினரையும் தவறுதலாக விமர்சனம் செய்வது கிடையாது. ஆனால் எங்களை பற்றி ஆளுங்கட்சியினரின் தவறு தலான விமர்சனங்களுக்கு தக்க பதிலடி அவ்வப்போது கொடுப்போம். அ.தி.மு.க ஆட்சியில் எந்த திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை என்ற தவறான கருத்தை முதல்–அமைச்சர் தெரிவிக்கிறார். கோவை மாவட்டத்தில் அ.தி.மு.க ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

அ.தி.மு.க ஆட்சியில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்களை தி.மு.க. அரசு ஸ்டிக்கர் ஓட்டி திறந்து வருகிறது.அதி.முகஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதற்காகவே தி.மு.க. பல திட்டங்களை ஆமை வேகத்தில் மேற்கொண்டு வருகிறது. அ.தி.மு.க ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எல்லாம் கிடப்பில் போட்டு விட்டனர்.

ஆனால் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அ.தி.மு.க. ஆட்சியில் எந்த திட்டமும் நிறைவேற்றவில்லை என்று தெரிவிக்கிறார். எப்படியாவது இந்த ஆட்சியாளர்கள் மக்களை குழப்பி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது.

ஆய்வுபணி

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு மு.க.ஸ்டாலின் எந்த திட்டங்களை கோவைக்கு கொண்டு வந்தார். திட்டங்களை அறிவிக்கிறார். எந்த திட்டமும் நடை முறைப்படுத்தவில்லை. பணி தொடங்கவில்லை. பல மாவட்டங்களுக்கு ஆய்வுக்கு போகிறேன் என்கிறார். தி.மு.க ஆட்சியில் எந்த திட்டமும் அறிவிக்கவில்லை. எந்த பணியும் நடக்கவில்லை. அப்படி இருக்கையில் எப்படி போய் ஆய்வு பணி மேற்கொள்ள முடியும்.

அ.தி.மு.க. ஆட்சியில் திட்டங்களை அறிவித்து, பணி முடிந்ததும் நாங்கள் அதனை திறந்தோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் கொண்டு வந்த திட்டங்களை தான் முதல்–அமைச்சர் திறந்து வைக்கிறார். இதுதான் நிலைமை.

2021 தேர்தலின் போது அவர் அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை.தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு என்னென் திட்டங்கள் நிறைவேற்றியுள்ளீர்கள் என நான் முதல்–அமைச்சரிடம் கேள்வி கேட்டேன். அதற்கு முதல்–அமைச்சர் பதில் சொல்லாமல், உதயநிதி பதில் சொல்கிறார். முதல்–அமைச்சர் எங்கே போனார்.

ஏற்கனவே நான் சொன்னபடி எல்லா மாநிலத்திலும் ஒரு முதல்–அமைச்சர் தான் இருக்கிறார்கள். தமிழகத்தில் 4 முதல்–அமைச்சர்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் உதயநிதி பதில் சொல்லி கொண்டிருக்கிறார். முதல்–அமைச்சர் சொல்ல வேண்டிய பதில் முதல்–அமைச்சர் தான் சொல்ல வேண்டும். அதிகார மையங்கள் 4 இருக்கிறது. அது யார் என்பது உங்களுக்கு தெரியும்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து விட்டது. அப்படி ஒரு முதல்–அமைச்சர் தான் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார். பொதுமக்கள் பிரச்சினை என்று சொன்னால் அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறைக்கு முழு சுதந்திரம் கிடையாது.

அ.தி.மு.க. கட்டமைப்பு பலமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் தொடர் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழக வெற்றிக்கழகம்

2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக்கழகத்துடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்குமா? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:–

சட்டமன்ற தேர்தல் வர ஒன்றரை ஆண்டு காலம் இருக்கிறது. அப்போது தான் கூட்டணி குறித்து தெரிவிக்க முடியும். ஏற்கனவே ஒரு மித்த கருத்துள்ள கட்சிகள் எங்களுடன் கூட்டணிக்கு வரும் என தெரிவித்துள்ளேன். வருகிற சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்பதை நாங்கள் பலமுறை தெரிவித்து விட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

இன்று முதல் திறக்கப்பட இருந்த

சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு பொதுமக்கள் விடிய விடிய போராட்டம்

அவிநாசி முதல் அவிநாசி பாளையம் வரை 32 கிலோ மீட்டர் அமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலையில் வேலம்பட்டி என்ற இடத்தில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இந்த சுங்கச்சாவடி நீர் நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக எழுந்த புகாரால் பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். இதனால் 2 வருடங்களாக சுங்கச்சாவடி திறக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் நேற்று இரவு 12 மணி முதல் மீண்டும் சுங்கச்சாவடியை திறக்க உள்ளதாகவெளியான தகவலை தொடர்ந்து விவசாயிகள் பொதுமக்கள், லாரி உரிமையாளர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு விடிய விடிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.இன்று அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

நெல்லை அருகே

பெண்ணை தாக்கி பலாத்காரம் செய்த வாலிபர் கைது

சிகிச்சைக்கு சென்றபோது கர்ப்பம் அம்பலமானதால் நடவடிக்கை

நெல்லை, நவ.13–

நெல்லை மாவட்டம் மூலைக்கரைப்பட்டி பகுதியில் வசிக்கும் 42 வயதான திருமணம் ஆகாத பெண் ஒருவர், காட்டுப்பகுதியில் கிடைக்கும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்து கடைகளில் கொடுத்து அதில் வரும் வருமானத்தை வைத்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு காட்டில் தனியாக பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்துக் கொண்டிருந்த அந்த பெண்ணை வாலிபர் ஒருவர் தாக்கி, காட்டில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் மருத்துவமனை ஒன்றில் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அனுமதிக்கப்பட்ட அந்த பெண், கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவர் அளித்த புகாரின் அடிப்படையில் நாங்குநேரி அனைத்து மகளிர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். அதில் மூலைக் கரைப்பட்டியை சேர்ந்த ராமமூர்த்தி (34) என்பவர் அந்த பெண்ணை தாக்கி பலாத்காரம் செய்தது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

தச்சநல்லூர் மண்டலத்தில்

சேதமடைந்த வாய்க்கால் தடுப்பு சுவரை சீரமைக்க வேண்டும்

மாநகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் மனு

நெல்லை, நவ.13–

நெல்லை மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் 13–வது வார்டு பொதுமக்கள், அ.தி.மு.க. மாணவரணி மாவட்ட இணைச்செயலாளர் சோம சுந்தரம், வட்ட செயலாளர் போர்வெல் மணி தலைமையில் மாநகராட்சிக்கு திரண்டு வந்து அளித்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:–

தச்சை மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில் மதகடி பாலம் அமைந்துள்ளது. இந்த பாலத்தின் தடுப்புச் சுவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தினால் சேதமடைந்தது. விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் இந்த வாய்க்கால் பாலம் இருந்து வருகிறது. இந்த வாய்க்காலானது 13, 14, 2 ஆகிய வார்டுகளை கடந்து வருகிறது. இந்த வாய்க்கால் கடந்த 2 ஆண்டுகளாக தூர்வாராமல் தண்ணீர் தேங்கி குப்பை கழிவுகளும் கிடக்கிறது. மதகடி பாலத்தின் இருபுறமும் தடுப்பு சுவர்கள் பழுத டைந்துள்ளதால் இரவு நேரங்களில் இருசக்கர வாகனங்களில் வருபவர்கள் நிலை தடுமாறி கீழே விழுந்து உயிர் இழப்பு ஏற்படும் நிலை இருக்கிறது. எனவே அதனை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

பஸ் நிலையத்தில்

காண்டிராக்டரை அரிவாளால் வெட்டிய நெல்லை வாலிபர் கைது

கள்ளக்காதலியின் மகனை பிடிக்க போலீஸ் தீவிரம்

நாகர்கோவில், நவ.13–

குமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் அருகே உள்ள பருத்தி விளை புல்லுவிளையைச் சேர்ந்தவர் ஈஸ்வரன் (வயது 40), கட்டிட காண்ட்ராக்டர். இவர் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கட்டிட வேலை செய்து வந்தார். இவருக்கும் நெல்லை மாவட்டம் முக்கூடல் அண்ணா நகர் பகுதியை சேர்ந்த கருப்பசாமி மனைவி பழனியாச்சி (38) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இருவரும் தூத்துக்குடியில் வாடகை வீட்டில் குடும்ப நடத்தி வந்தனர்.

பழனியாச்சி.

நவீன்

ஈஸ்வரன் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு பழனியாச்சியை விட்டு பிரிந்து நாகர்கோவில் வடக்கு கோணத்தில் உள்ள தாயார் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் ஈஸ்வரனை தன்னுடன் குடும்ப நடத்த வருமாறு பழனியாச்சி பலமுறை அழைத்தார். ஆனால் அவர் வரவில்லை. இந்த நிலையில் அவரை தீர்த்துகட்ட பழனியாச்சி முடிவு செய்தார். இதையடுத்து ஈஸ்வரனை தொடர்பு கொண்டு வடசேரி பஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்தார் .

அங்கு வந்த ஈஸ்வரனை 2 வாலிபர்கள் சரமாரியாக வெட்டி விட்டு தப்பி சென்று விட்டனர். இது குறித்து ஈஸ்வரன் மனைவி கொடுத்த புகாரின் பேரில் பழனியாச்சி உள்பட 3 பேர் மீது கொலைமுயற்சி வழக்கு பதிவு செய்து போலீசார் தேடி வந்தனர். இவர்களை பிடிக்க 3 தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த தனிப்படையினர் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் பாபநாசம் பகுதியில் பதுங்கி இருந்த பழனியாச்சியை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அவரை நாகர்கோவில் அழைத்து வந்தனர். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதில் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. பழனியாச்சிக்கும், ஈஸ்வரனுக்கு இடையே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டது.

இருவரும் தூத்துக்குடியில் வசித்து வந்தனர். அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஈஸ்வரன் பழனியாச்சியை விட்டு பிரிந்து வந்து விட்டார். பலமுறை செல்போனில் தொடர்பு கொண்டும் அவர் பேச மறுத்ததையடுத்து அவரை தீர்த்துக்கட்ட பழனியாச்சி முடிவு செய்துள்ளார். இதுகுறித்து மகன் மாரியப்பனிடம் கூறினார்.

இதையடுத்து அவர், நண்பர் ஒருவரின் உதவியுடன் ஈஸ்வரனை தீர்த்து கட்ட முடிவு செய்தார். சம்பவத்தன்று பழனியாச்சியின் மகன் மாரியப்பன் மற்றும் அவரது நண்பர் அம்பாசமுத்திரம் வடக்கு அரியநாயகி புரத்தைச் சேர்ந்த நவீன் (22) ஆகிய இருவரும் வடசேரி பஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர். அங்கு வந்த ஈஸ்வரனை இருவரும் சரமாரியாக வெட்டி உள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் விசாரணையில் தெரிய வந்தது. தொடர்ந்து கைது செய்யப்பட்ட பழனியாச்சியை போலீசார் கோர்ட்டில் ஆஜர்படுத்தி தக்கலை ஜெயிலில் அடைத்தனர். தலைமறைவாக இருந்த நவீன், மாரியப்பனை தேடி வந்த நிலையில் நேற்றிரவு தனிப்படை போலீசார் நவீனை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட அவரை நாகர்கோவிலுக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தலைமறைவாகி உள்ள பழனியாச்சியின் மகன் மாரியப்பனை தனிப்படை போலீசார் தேடி வருகிறார்கள்.

கோவில் பூசாரி தற்கொலை விவகாரம்

ஓ.பி.எஸ். தம்பி உள்பட 6 பேர் விடுதலை

திண்டுக்கல் கோர்ட்டு பரபரப்பு தீர்ப்பு

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள டி.கள்ளிப்பட்டியைச் சேர்ந்த சுப்புராஜ் மகன் நாகமுத்து (வயது 22). இவர் கைலாசபட்டியில் உள்ள கைலாசநாதர் கோவில் பூசாரியாக இருந்து வந்தார்.

கோவிலில் கடை ஒதுக்குவது தொடர்பாக இவருக்கும், முன்னாள் முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் தம்பியுமான ஓ.ராஜாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2012ம் ஆண்டு டிசம்பர் 7–ந் தேதி நாகமுத்து தற்கொலை செய்து கொண்டார். இவரை தற்கொலைக்கு தூண்டியதாக கோவில் அறங்காவலராகவும், பெரியகுளம் முன்னாள் நகர்மன்ற தலைவராகவும் இருந்த ஓ.ராஜா, தென்கரை பேரூராட்சி முன்னாள் தலைவர் பாண்டி உள்பட 7 பேர் மீது பெரியகுளம் தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில் 23 சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு 196 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 4 தடயங்கள், சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசு தரப்பின் இறுதி கட்ட வாதத்திற்கு பின் இன்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஓ.ராஜா உள்பட 6 பேரும் காலையிலேயே கோர்ட்டில் ஆஜராகினர். பழங்குடியின மற்றும் பட்டியலின சிறப்பு நீதிமன்ற நீதிபதி முரளிதரன் குற்றம் சாட்டப்பட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். சாட்சிகள் அளித்த தகவல்கள் ஒருமனதாக இல்லை என்றும், தற்கொலைக்கு தூண்டியதற்கான அடிப்படை முகாந்திரம் இல்லாததால் விடுதலை செய்யப்படுவதாக உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

47 வயது பெண் பக்தையுடன் திருமணம்:

சூரியனார் கோவில் ஆதீனத்தின் அதிர வைக்கும் காதல் கதை

சன்னியாசம் வேண்டாம்... சம்சாரமே போதும் என முடிவெடுத்ததாக தகவல்

தஞ்சை திருவிடை மருதூர் அருகே உள்ள சூரிய னார் கோவில் மடத்தின் 28–வது மடாதிபதியான மகாலிங்க தேசிக பண்டார சுவாமிகளின் காதல் கதை ஆன்மிக வட்டாரத்தையே அதிர வைக்கும் வகையில் பரபரப்பான பேச்சாக மாறி இருக்கிறது.

மிகவும் பழமை வாய்ந்த சைவ ஆதீனங்களில் ஒன்றாக கருதப்படும் இந்த மடத்தின் குருமகா சன்னி தானமாக இருந்த சங்கர லிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தனது 109 வயதில் முக்தி அடைந்ததை தொடர்ந்து மகாலிங்க சுவாமிகள் புதிய ஆதீனமாக பொறுப்பேற்றுக் கொண் டார்.

இந்த பொறுப்பில் அமர்ந்து ஆன்மிக பணி களை செய்வதற்கு 'பெண் ஆசை' இல்லாதவர்களே நியமிக்கப்பட்டு வந்துள்ள னர். இதுவரை 27 பேர் அங்கு ஆதீன பொறுப்பை வகித்து வந்துள்ளனர். இவர்கள் அனைவருமே முற்றும் துறந்த நிலையி லேயே ஆன்மிக பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

பிரம்மச்சாரியத்தை கடைபிடித்து வருபவர் களும், திருமணமாகி குடும் பத்தை பிரிந்து துறவறம் பூண்டவர்கள் மட்டுமே தூரியனார் கோவில் மடத்தின் பொறுப்பை ஏற்று வழி நடத்தி சென்றுள்ளனர்.

ஆதீனத்தில் வகுக்கப்பட்டுள்ள மரபு மற்றும் விதிகளின்படி திருமணம்செய்துகொண்டவர்கள் ஆதீனமாக இருக்க முடியாது என்று கூறுகிறார்கள். இந்த மடத்தில் பெண்கள் நிரந்தரமாக தங்குவதற்கும் தடை உள்ளது. இப்படி முழுக்க முழுக்க துறவறம் பூண்டவர்களின் கூடார மாகவே காட்சி அளித்த சூரியனார் கோவில் மடத்தின் ஆதீனமான மகாலிங்க சுவாமிகள் தனது 54 வயதில் 47 வயதான கர்நாடகாவை சேர்ந்த பெண் பக்தையான ஹேமா ஸ்ரீயை காதலித்து திரு மணம் செய்து கொண் டிருப்பதுதான் தற்போது மிகப்பெரிய அளவில் பேசு பொருளாக மாறி இருக்கிறது.

இருவரும் திருமணம் செய்து கொண்டதற்கான சான்றிதழ் சமூக வலை தளங்களில் பரவிய பிறகே ஆதீனத்தின் காதல் கதை கசிய தொடங்கி உள்ளது. 'ஹேமாஸ்ரீயை தான் திருமணம் செய்து கொண்டது உண்மைதான்' என்று மகாலிங்க சுவாமிகள் வெளிப்படையாகவே அறி வித்துள்ள நிலையில் அவ ரது திருமணம் பற்றி சமூக வலை தளங்களில் பல்வேறு தரப்பினரும் காரசாரமான கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள்.

'சன்னியாசம் வேண்டாம், சம்சாரமே போதும்' என்ற ஆதீனம் முடிவெடுத்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கும் நிலை யில் ஹேமாஸ்ரீயுடன் ஆதீனத்துக்கு காதல் மலர்ந்தது எப்படி? என்பது பற்றி பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஹேமாஸ்ரீ சூரிய னார் கோவில் ஆதீனத்துக்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் முதல்முறையாக சென்றுள்ளார். அப்போது மகாலிங்கசுவாமிகளின் பேச்சுக்கள் அவருக்கு பிடித்து போனது. இதனால் அடிக்கடி மடத்துக்கு சென்று வந்தார். மடத்தில் பணிவிடைகள் செய்வது. மகாலிங்க சுவாமிகளுக்கு தேவையான உதவிகளை செய்வது போன்றவற்றில் ஹேமாஸ்ரீ ஆர்வம் காட்டி உள்ளார். அதீனத்துக்கு காபி போட்டுக் கொடுப்பது. அவர் வெளியில் செல்லும் போது சகபக்தைகளுடன் தானும் உடன் செல்வது என மடத்தின் மீது ஈடுபாடு கொண்டு செயல்பட தொடங்கி உள்ளார்.

இப்படி சூரியனார் கோவில் மடத்தின் மீது அளவு கடந்த பற்றுடன் இருந்த ஹேமாஸ்ரீயின் நடவடிக்கைகளால் மகாலிங்க சுவாமிகளும் ஈர்க்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பை பறிமாறிக்கொண்டு யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொண் டுள்ளனர். கர்நாடகாவில் வைத்தே இந்த திருமணம் நடைபெற்றுள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள மகாலிங்க சுவாமிகள் கர்நாடக மாநிலத்தில் பல மடங்கள் உள்ள நிலையில் அங்கு சைவ மடங்கள் இல்லாத குறையை போக்குவதற்காக ஹேமாஸ்ரீ இடம் கொடுத் துள்ளார்.

அங்கு கட்டப்படும் மடத்தில் டிரஸ்டியாக ஹேமாஸ்ரீயை நியமிக்க உள்ளேன் என்று அதிரடி காட்டியுள்ளார். இதற்கு முன்பு ஆதீனங்களாக இருந்த பலரும் திருமணம் செய்து கொண்டு உள்ளனர்.

அவர்களின் வழியையே தான் பின்பற்றியுள்ளேன். என்றும் மகாலிங்க சுவாமிகள் தெரிவித்துள்ள நிலையில் அவருக்கு எதிராக பொதுமக்கள் பொங்கி எழுந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று மாலை 5 மணி அளவில் கிராம மக்கள் ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்து மடத்தின் வாசலுக்கு சென்றனர். மூன்று பேரை மட்டும் உள்ளே வரச் சொல்லி ஆதீனம் மகாலிங்க சுவாமி பேசினார்.

அப்போது துறவறத்தில் இருந்து இல்லறத்திற்கு சென்றுள்ளதால் ஆதீனமாக நீங்கள் நீடிக்க வேண்டாம். நீங்கள் மடத்தை விட்டு வெளியேற வேண்டும் என வலியுறுத்தினர். இதனை சற்றும் எதிர்பார்க்காத மகாலிங்கசுவாமி அறநிலைத்துறை அதிகாரி களிடம் பேசிவிட்டு முடிவு எடுக்கலாம். ஒரு நாள் அவகாசம் கொடுங்கள் என்றார்.

ஆனால் நீங்கள் உடனடியாக மடத்தில் இருந்து வெளியேற வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். இதை யடுத்து உடனடியாக மடத்தில் இருந்து வெளியேறி னார். பின்னர் மடத்துக்கு பூட்டு போடப்பட்டது.

இந்த விவகாரம் பற்றி கருத்து தெரிவித்துள்ள மகாலிங்க சுவாமிகள் வெளியூரில் தங்கி இருந்து மடத்தை அறநிலையத் துறையிடம் ஒப்படைக்கும் பணி களை மேற்கொள்ள உள்ளதாக கூறியுள்ளார்.

துறவறம் பூண்டிருந்த ஆதீனம் காதலில் விழுந்து திருமணம் செய்து கொண்டதால் தூரியனார் கோவில் மடத்தின் தீவிர பக்தர்கள் தவிக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

காதல்... எந்த பேதமும் பார்க்காது என்பார்கள். அது உண்மைதானோ?

ஆதீனம் மகாலிங்க சுவாமிகள்

ஹேமாஸ்ரீ

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS MADURAI BENCH
CMP. No. 11594 of 2024
In
CMA (MD). No. 467 / 2023
The United India Insurance Company Ltd, Through its Branch Manager, Sivakasi. ....Appellant
VS
Priya, W/o.Ponraj,
D. No. 2/406, Naduvoor north street, Sithurajapuram, Virudhunagar District. Now residing at No.31, VVK,Street, Pettai, Tirunelveli District.
...1st Respondent

The oriental Insurance Company has preferred the above Civil Miscellaneous Appeal on the file of Madurai Bench of Madras High Court in CMP. No. 11594 of 2024in CMA. (MD) No. 467 OF 2023 The Bench has ordered notice to you, on 06/11/2024 returnable by 20/11/2024. You are requested to take notice of the same. If you fail to appear either in person or through pleader on the appointed day by 10.30 AM, the matter would be decided in your absence.

A. ILANGO. [M.S. 434 (a) /2014]
Advocate,
2/1018, periyar street,
Tahsildar Nagar Madurai–20.

சார்பு நீதிமன்றம் முதுகுளத்தூர்
I.A.No. 2/2024 in
A.S.NO.13 /2017
குமாரவேலு –மனுதார்/அப்பீல் வாதி /எதிர்/
கமலா, க/பெ. லேட்.நாகேந்திரன், க.எண்: 982A/6, 3வது தெரு, ராஜிவ் நகர், கோவில்பட்டி டவுண், கோவில் பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.
–எதிர்மனுதாரர்/ 37ம் அப்பில் பிரதிவாதி அறிவிப்பு

மேற்படி எண் வழக்கில் மனுதார் சார்பில் 37ம் எதிர்மனுதாரர்/37ம் அப்பில் பிரதிவாதிக்கு பலமுறை சமூகம் நீதிமன்றத்தின் மூலமாக நோட்டீஸ் அனுப்பியும் சரியான முகவரியில் இருந்து கொண்டே மேற்படி 37ம் எதிர்மனுதாரர்/37ம் அப்பில் பிரதிவாதி நோட்டீஸை வாங்க மறுத்து வருகிறார். மேற்படி 37ம் எதிர்மனுதாரர்/37ம் அப்பில் பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு வருகிற 18.11.2024ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராவதற்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. தவறும் பட்சம் தாங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சம் உத்தரவு பிறப்பிக்கப்படும் என இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

திரு.K.ரமேஷ்கண்ணன், M.A.B.L.,
திரு.A.மயில்வேல், B.A.B.L.,
திரு.R.முத்துவேல், B.A.B.L.,
அட்வகேட்ஸ், கமுதி.

மாண்புமிகு சார்பு நீதிமன்றம், வள்ளியூர்
O.S.No.153/2024
கனரா வங்கி, அதன் முதன்மை மேலாளர், திசையன்விளை கிளை, திருநெல்வேலி மாவட்டம்.
–வாதி
1.A.பவித்ரா, D/o.அர்ஜூனன், 1/17 பிள்ளையார் கோவில் தெரு, கஸ்தூரி ரெங்கபுரம், திசையன்விளை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்–627 112.
2.A.ராஜலெட்சுமி, W/o.அர்ஜூனன், மேற்படி முகவரி.
–பிரதிவாதிகள்

மேற்படி வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் ஆஜராவதற்கு 26.11.2024–ம் தேதி அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி தினம் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

R.அசோக்குமார், B.E., B.L.,
வழக்கறிஞர், மதுரை.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை - 5
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 29 கட்ட (க&ப) வட்டம் / 2024 – 2025 / நாள்: 11.11.2024
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை / இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்ட (க (ம) ப) வட்டம், சென்னை - 5 அவர்களால், பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1	திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கான கட்டடங்கள் கட்டும் பணி. முன்வைப்புத்தொகை: ரூ. 2,51,000	ரூ. 481.00 இலட்சங்கள்	10 மாதங்கள்	வகுப்பு III மற்றும் அதற்கு மேல்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 29.11.2024 மாலை 03.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 29.11.2024 மாலை 04.00 மணிக்கு.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
செ.ம.தொ.இ/4878/ஒப்பந்தப்புள்ளி/2024 கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5

விடிஎம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர் CIN No.: L17111TN1946PLC003270 www.vtmill.com

30.09.2024 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை
(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | 30.9.2024 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாத) | 30.6.2024 அன்று முடிந்த காலாண